பட்ட உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்தத் தொகையை வசூல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25-ம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிப்பது என்று நாம் முன்பு முடிவு எடுத்து இருந்தோம். அதை 28-ம் தேதி என்று வைத்துக் கொண்டு, இன்றும், நாளையும் விவாதம் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 28-ம் தேதியன்று எடுத்துக் கொள்வதாக இருந்த அரசினர் அலுவல்கள் 29-ம் தேதியன்றும், 29-ம் தேதியன்று எடுத்துக்கொள்வதாக இருந்த தனியார் அலுவல்கள் 30-ம் தேதியன்றும் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையின் பேரில் நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய கட்சியின் சார்பில் சில திருத்தங்களை நாங்கள் கொடுத்து இருக்கிறோம். அந்தத் திருத்தங்களிலே ஓரளவிற்கு எந்தப் பிரச்சினைகளில் எல்லாம் நாங்கள் வேறுபட்டு இருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அதே நேரத்தில் பொதுவாகப் பேசுகின்றபோது கவர்னர் பெருமானின் பேருரை ஆட்சியாளர்கள் இனி செய்யப் போகும் காரியங்களைப் பற்றியும், கடைப்பிடிக்க இருக்கின்ற கொள்கைகளைப் பற்றியும் கோடிட்டுக் காட்ட வேண்டிய அளவில் இருக்க